[22nd February 1955

Community platforms for Harijans.

* 718 *Q*.—SRI S. RAMALINGAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) how many community platforms for Harijans were opened in the year 1953–54; and

(*b*) the expenditure incurred on them?

THE HON. SRI B. PARAMESWARAN :—" (*a*) Six hundred and six.

" (*b*) Rs. 1,98,432."

SRI S. RAMALINGAM :—" சுமார் இரண்டு லட்சம் ரூபாய் வரையில் செலவுசெய்து கட்டிய மேடைகள் இப்பொழுது எந்த உபயோகத்திற்கும் இல்லாமல் இடிந்து கிடக்கின்றன என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, I have answered this question on more than one occasion and I do not think that there is any need for dilating upon it further."

SRI S. DAIVASIGAMONEY :—" Sir, is the work of constructing community platforms still going on? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" No, Sir. No funds are available and we have therefore stopped it."

SRI S. RAMALINGAM :—" Sir, I wish to rise on a point of order."

MR. SPEAKER :—" I shall call the hon. Member again."

SRI A. RATNAM :—" இந்தத் திட்டத்தின்படி எத்தனை மேடைகள் கட்டப்பட்டன ? பாழடைந்து கிடக்கும் மேடைகளனைத்தையும் புதுப்பிப்பதற்கு அல்லது பழுது பார்ப்பதற்காவது அரசாங்கம் முன்வருமா ? தீண்டாமையை ஒழிப்பதற்காகக் கட்டப்பட்ட அந்த மேடைகளைச் செப்பனிடுவதற்கு ஒரு காசுகூட அரசாங்கம் செலவழிக்காமலிருப்பதற்குக் காரணம் என்ன ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, I do not know whether it is one supplementary question or three questions. As regards the first one, we have stopped construction of these platforms from April 1954 because funds were not available as the funds set apart for this purpose were exhausted. As regards the others, I do not know what the hon. Member wants by way of improvements and whether he has got any suggestions. We cannot undertake to give an assurance that the platforms will be repaired."

SRI S. RAMALINGAM :—" கனம் மந்திரி அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லும்போது, 'பல தடவை இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். ஆகையால், இதற்குப் பதில் சொல்லத் தேவையில்லை' என்று சொன்னார்கள். சபாநாயகருடைய அனுமதியின்பேரில் நாங்கள் கேட்கும் கேள்விக்கு அவர் பதில் சொல்லவேண்டுமேதவிர, . . ."

22nd February 1955]

MR. SPEAKER :—" மந்திரி அவர்கள் இப்படித்தான் பதில் சொல்ல வேண்டும், அல்லது அவர் சொன்ன பதில் தவறு என்று சபாநாயகர் சொல்லமுடியாது."

SRI S. RAMALINGAM :—" 'பதில் சொல்ல மாட்டேன்' என்று மந்திரி அவர்கள் சொன்னது அவ்வளவு சரியல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்."

MR. SPEAKER :—" 'ஏற்கெனவே இம்மாதிரி கேள்வி வந்தது; பதில் சொல்லியிருக்கிறேன்' என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள், என்று நான் நினைக்கிறேன். இதில் சபாநாயகர் ஒன்றும் செய்வதற்கில்லை."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, the Hon. Minister was asking for suggestions for the improvement of these platforms. In view of the fact that the platforms constructed in Malabar are not being used for any purpose either for cultural advancement or for community dances because there is heavy rain in Malabar for six months in the year and the other six months are extremely hot, will the Government be kind enough to provide some roofing over these platforms so that they may be used by the Harijan community? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, I have no objection to examining the suggestion made by the hon. Member provided hon. Members do not again raise such questions as saying that the roof put up is also a waste."

SRI K. V. RAMASWAMI :—" சேரிகளில் கட்டப்பட்டிருக்கும் மேடைகள் நெல் காயப்போடுவதற்கு உபயோகப்படுகின்றன. ஆகையால், இதைக் கைவிடுவதற்கு சர்க்கார் முன்வருமா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" மேடைகளை நெல் காயப்போடுவதற்கு உபயோகப்படுத்துவதும் நல்லது என்று அரசாங்கம் கருதுகிறார்கள். அதனால் நஷ்டம் எதுவும் இல்லை."

SRI S. R. ARUMUGAM :—" கம்யூனிடி ப்ளாட்பாரங்கள் கட்டியதன் நோக்கம் சரியானபடி நிறைவேறாமலிருக்கிறதென்பதை சர்க்காரே ஒத்துக் கொள்ளுகிறார்கள். இனிமேலாவது அந்நோக்கம் சரியானபடி நிறைவேற அரசாங்கத்தார் முயற்சி எடுத்துக்கொள்வார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, it is the moral duty of the caste Hindus as well as that of the Harijans to see that these platforms are used. If the Harijans have not made use of these platforms, it is not only they who are to blame but the caste Hindus have also to blame equally."

SRI S. THINAKARASAMI THEVAR :—" தென் ஜில்லாக்களில் இம்மாதிரி ஹரிஜனங்களுக்காக கட்டப்படும் 'ப்ளாட்பாரங்களை' வரவேற்பதோடு அவை நல்ல முறையில் உபயோகப் படுத்தப்பட்டுவருகின்றன என்ற விஷயம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" தென் ஜில்லாக்களில் கட்டப்பட்டிருக்கும் மேடைகள் நல்ல முறையில் உபயோகிக்கப்பட்டு வருகின்றன என்பது எனக்கு நன்றாகத் தெரியும். பல இடங்களில் நான் நேரிலும் பார்த்து தெரிந்து கொண்டிருக்கின்றேன்."